Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 28/2023

Prosecution PW- 7

Deposition of Witness for    Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | நித்யா |
| Father Name | : | நடேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 08.04.2024

**1, 3,4,5 எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் எனது பெற்றோருடன் தாந்தோணிமலையில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளான பாலசுப்ரமணி, தெய்வநாயகி, ரேவதி, அம்சா ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். கடந்த 2017 ம் வருடம் கரூர் கோவை ரோட்டில் உள்ள ஸ்ரீராம்

Sd/-R.Sujatha
நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்

இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். பாலசுப்ரமணி HDFC வங்கியில் வேலை பார்த்து வந்தார். எனக்கும், பாலசுப்ரமணிக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவர் என்னிடம் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்று என்னை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் கூறினார். நான் எங்கள் வீட்டில் முறைப்படி பேசி பெண் கேட்டால் கொடுப்பார்கள் என்றும், நான் திருமணம் செய்து கொள்கிறேன் என்றும் கூறினேன். பாலசுப்ரமணி , அவரது அம்மா தெய்வநாயகி , சகோதரிகள் ரேவதி, அம்சா ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை பெண் கேட்டார்கள்.

2) எனது அப்பா அவர்களுடன் நீங்கள் முதலியார் ஜாதியை சேர்ந்தவர்கள் என்றும், நாங்கள் பள்ளர் இனத்தை சார்ந்தவர்கள் என்றும், வேறு வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் யோசித்து சொல்கிறேன் என்று கூறினார். அவர்கள் ஜாதி பிரச்சனையில்லை என்றும், திருமணம் செய்து கொள்வதற்கு சம்மதம் தெரிவித்தார்கள் என்றும், 30.11.2017 ம்தேதி சேங்கல் மலை , வாரி வரதராஜ பெருமாள்கோவிலில் இருவீட்டார்கள் சம்மதத்தின் பேரில் திருமணம் நடந்தது. பின்பு , 11.05.2018 ம் தேதிஎங்கள் திருமணத்தை கரூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டோம். திருமணத்திற்கு பின்னிட்டு, நான் , பாலசுப்ரமணி, அவரின் அம்மா, அவருடைய சகோதரிகள் ஆகியோர்கள் வடக்குபாளையத்தில் குடியிருந்து வந்தேன்.

3) சுமார் 9 மாதங்களுக்கு முன்பு பாலசுப்ரமணியன் உறவினரின் புதுமனை புகுவிழாவிற்கு நானும், பாலசுப்ரமணியமும் சென்றபோது அங்கிருந்த அவருடைய உறவினர்கள் பாலசுப்ரமணிக்கு ஏற்கனவே பொள்ளாச்சியை சேர்ந்த ஜோதிமுருகேஸ்வரி என்பவருடன் திருமணம் முடிந்து ஆண் குழந்தை ஒன்று இருப்பதாகவும் கூறினார்கள். கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்வதாகவும் சொன்னார்கள். நான் பாலசுப்ரமணியிடமும், அவருடைய அம்மா , சகோதரியிடமும் முதல் திருமணம் பற்றி கேட்டபோது நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாகவும், அதுபற்றி எதுவும் கேட்ககூடாது என்றும் கூறிவிட்டார்கள். பின்பு , அவர் என்னை விட்டுவிட்டு 3 வதாக சுதா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டதாக கேள்விபட்டேன்.

4) 21.02.2021 ம்தேதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பாலசுப்ரமணி மீது ஜோதி முருகேஸ்வரி கொடுத்த புகாரின் பேரில் கைது செய்துள்ளதாக கேள்விப்பட்டேன்.

Sd/-R.Sujatha

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்

மகளிர் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.  அவர்கள் என்னை விசாரணை செய்தபோது பாலசுப்ரமணியும், அவருடைய அம்மா, சகோதரிகள் ஏற்கனவே திருமணம் ஆனதை மறைத்து என்னை 2 வதாக திருமணம் செய்து வைத்து விட்டார்கள் என்றும், வெளியே சொன்னால் அவமானமாக இருக்கும் என்றும், நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் கூறினேன்.  என்னிடம் காட்டப்படும் புகைப்படம் அ.சா.ஆ 3 , நானும், பாலசுப்ரமணியமும் திருமணத்தின்போது எடுத்து கொண்ட புகைப்படம் . என்னிடம் காட்டப்படும் திருமண பதிவு சான்றிதழ் அ.சா.ஆ. 5ல் ஒட்டப்பட்டுள்ள புகைப்படங்கள் நானும், பாலசுப்ரமணியமும் ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை
இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR

CC No. 28/2023

Prosecution PW- 8

Deposition of Witness for    Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | சுதா |
| Father Name | : | பாஸ்கர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 08.04.2024

**1, 3,4,5 எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 317 குவிமுசப்படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் எனது கணவர், குழந்தைகளுடன் தாந்தோணிமலையில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியான பாலசுப்ரமணியை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு , மகளிர் சுய உதவி குழு மூலமாக கருரில் உள்ள HDFC வங்கியில்

Sd/-R.Sujatha

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்

கடன் வாங்குவதற்காக அடிக்கடி சென்று வந்தபோது HDFC வங்கியில் லோன் பிரிவில் வேலை பார்த்து வந்த பாலசுப்ரமணியுடன் பழக்கம் ஏற்பட்டது. அவருடன் நண்பர் ஆக பழகி வந்தேன். எனக்கும், எனது கணவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததால் நான் எனது தாலியை கழட்டி வைத்து விடுவேன். எனக்கு திருமணம் ஆகி குழந்தை உள்ளது என்பதும், பாலசுப்ரமணியத்திற்கு தெரியும்.

2) அவர் என்னிடம் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்று சொல்லி வந்தார். ஒருநாள் என்னை கரூர் கற்பக விநாயகர் கோவிலுக்கு வரும்படி கூறினார். நான் கோவிலுக்கு சென்றபோது அவர் என்னை சாமி கும்பிடும்படி கூறினார். சாமி கும்பிட்டு கொண்டிருந்தபோது என் கழுத்தில் தாலியை கட்டிவிட்டார். அதை அவருடைய நண்பர் ஒருவர் செல்போனில் போட்டோ எடுத்து வைத்தார். நான் அவரிடம் ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது என்றும், தாலியை கழட்டும்படி கூறினேன். அவர் என்னிடம் நான் அதை பார்த்து கொள்கிறேன் என்று கூறினார். நான் தாலியை கழட்டி கொடுத்துவிட்டு சென்றுவிட்டேன். அவருக்கு ஏற்கனவே திருமணம் முடிந்து குழந்தை உள்ளது என்றும் தெரியவந்தது. நான் எனது குடும்பத்தை நினைத்து அவரைவிட்டு விலகிவிட்டேன். 2021 ம் ஆண்டு கரூர் மகளிர் போலிசார் விசாரணைக்காக என்னை அழைத்தார்கள். நான் நடந்த விசயத்தை அவர்களிடம் கூறினேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 4 புகைப்படத்தில் உள்ளது நானும், பாலசுப்ரமணியமும் ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்